**குளியாபிடிய நகர சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குளியாபிடிய நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சினிமா கொட்டகைகளின் களியாட்ட வரித் தொகையில் 50 சதவீதம் மாத்திரம் கணக்கீடு செய்தல் கொள்கையாக இருந்தது.

(ஆ) நடைமுறையல்லாத சொத்துக்கள் கணக்குகளில் இனங்காணும் போது கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 213,500 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்பு மதிப்பிடல் கொள்விலையில் என்ற கொள்கையாக இருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு மீதி மதிப்பிடப்படாமல் ரூபா 23,815,788 தொகையான பேரேட்டுக் கணக்கின் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 18,597,358 ஆல் பௌதீக இருப்பு மீதிக்கு கூடுதலாக பேரேட்டு கணக்கு மீதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக பள்ளபிட்டிய தகனச்சாலையின் சேவைக்கட்டண வருமானம் ரூபா 456,000 தொகை இலாபமாக இனங்காணப்படாமல் மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்காக பள்ளபிட்டிய தகணச்சாலையின் இலாபத்தில் 50 சதவீதமான ரூபா 124,198 தொகை குளியாப்பிட்டிய பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய போதிலும், அப்பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக வீதவரி ரூபா 190,910 பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வீதவரியிலிருந்து குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) வீதவரி அறவீடு மற்றும் உரிய பிடியாணைக் கட்டண வருமான மீதி, ஆதனவரி அறவீடு மற்றும் உரிய பிடியாணைக் கட்டணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஆதனவரி மற்றும் குத்தகை வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் இடையே ரூபா 9,575,024 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 19,266,727 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 15,924,811 இற்கு காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 3,341,916 மீதிகளுக்கு காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமை மேலும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பெறவேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 2,232,160 ஆக இருந்ததுடன், அவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 35,044,117 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 24,595,784 இற்கு காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 10,448,334 மீதிகளுக்கு காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதிகளில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 9,930,567 ஆன மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,770,479 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,886,643 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 8,883,836 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 6,275,496 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 25,970,471 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 4,075,504 வரையான மிகை ஒன்றாக மாறியுள்ளது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | வருமானம் 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | செலவினம் 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் (10,20,30,40) | 60,165 | 53,443 | 6,722 | தனிப்பட்ட வேதனம் | 73,782 | 55,834 | 17,948 |
| (ii) | ஏனையவை (50,60,70) | 60,805 | 49,086 | 11,719 | ஏனையவை | 23,418 | 31,808 | 8,390 |
| | உப மொத்தம் | 120,970 | 102,529 | 18,441 | உப மொத்தம் | 97,200 | 87,642 | 9,558 |
| (iii) | மூலதன வருமானம் | 6,276 | 2,268 | 4,008 | மூலதன செலவினம் | 25,971 | 18,256 | 7,715 |
| | மொத்தம் | 127,246 | 104,797 | 22,449 | மொத்தம் | 123,171 | 105,898 | 17,273 |
| | செயற்பாட்டு விளைவு | 23,770 | 14,887 | 8,883 | மிகை/ பற்றாக்குறை | 4,075 | (1,101) | 5,176 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 120,969,779 தொகையில் 50 சதவீதம் அதாவது ரூபா 60,804,636 தொகையும் சபையினால் உருவாக்கப்பட்ட வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை கொண்டிருந்தன. அவ்வாறே மூலதனச் வருமானமான ரூபா 6,275,496 ஆன முழு அளவும் ஏனைய நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கப்பட்ட பணம் ஆகும்.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமாகிய ரூபா 97,199,300 தொகையில் மொத்தமாக 76 சதவீதமான ரூபா 73,781,563 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவினமாக இருந்ததுடன் அவற்றில் மொத்தமாக 71 சதவீதம் அதாவது ரூபா 52.284,221 தொகை சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி வருமான மானியங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவா றான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 14,044 | 16,468 | 9,601 | 15,791 | 11,803 | 10,477 |
| (ii) குத்தகை வாடகை | 11,897 | 12,824 | 1,011 | 10,981 | 12,261 | 231 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 15,079 | 13,104 | - | 13,541 | 13,553 | - |
| (iv) ஏனைய வருமானம் | 64,502 | 78,574 | 8,569 | 62,215 | 55,729 | 14,160 |
| மொத்தம் | 105,522 | 120,970 | 19,181 | 102,528 | 93,346 | 24,868 |

## 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 10,477 | 16,468 | 26,945 | 6,370 | 10,974 | 17,344 | 4,107 | 5,494 | 9,601 |
| வாடகை | 231 | 8,463 | 8,694 | 231 | 7,452 | 7,683 | - | 1,011 | 1,011 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 13,104 | 13,104 | - | 13,104 | 13,104 | - | - | - |
| ஏனைய வருமானம் | 14,160 | 78,574 | 92,734 | - | - | 67,714 | - | - | 25,020 |
| மொத்தம் | 24,868 | 116,609 | 141,477 | 6,601 | 31,530 | 105,845 | 4,107 | 6,505 | 35,632 |

## 2.3.3 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கெமா வியாபார தொகுதியின் கீழ் மாடியின் 36 முதல் 63 ஆம் இலக்க கடை வரையும் முதலாம் மாடியின் 01 முதல் 66 ஆம் இலக்கம் வரையும் இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களின் பிரகாரம் 2014 செப்தம்பர் 27 ஆந் திகதி 36 முதல் 56 ஆம் இலக்க வரையும், 61 முதல் 63 ஆம் இலக்கம் வரையும் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் வரையிலும் மதிப்பீட்டு பெறுமதியைப் பெற்று வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மற்றும் 03 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 4,908,463 தொகையும், 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 04 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 1,460,917 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 962,152 என வீதவரி மீதிகள் காணப்பட்ட

போதிலும், 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவையிலிருந்து ரூபா 3,794,038 ஆன மீதியே அறவிடப்பட்டிருந்தன.

**2.3.4 குத்தகை வாடகை**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1983 ஆம் ஆண்டிலிருந்து கடைத்தொகுதியின் 54 கடைகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. 1983 ஆம் ஆண்டில் மேற்கொண்ட முதலாவது மதிப்பீட்டின் பின்னர் எவ்வித மதிப்பீடும் மேற்கொள்ளப்படாதிருந்தமையால் 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி புதிய மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டு கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முன்னர் காணப்பட்ட கட்டணங்களுடன் ஒப்பிடும் போது புதிய மதிப்பீடு பாரியளவு தொகையாக இருப்பதால் புதிய மதிப்பீட்டின் பேரில் வாடகை கொடுப்பனவினை குத்தகையாளர்கள் நிராகரித்திருந்தனர். அதன் பிரகாரம் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 768,758 ஆன நிலுவை காணப்பட்டது.

(ஆ) பஸ் நிலையத்தில் முதலாம் மாடியில் 117/28/1/1 மற்றும் 117/27/13 ஆம் இலக்க கடைகளும் கீழ் மாடியில் வலை மேவுகையுடன் கூடிய பிரதேசம் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு கட்டணங்கள் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன், 2013 ஒக்தோபர் 29 ஆந் திகதி சபை தீர்மானமொன்றின் மூலம் 117/28/1/1 கடையிலிருந்து ரூபா 4,000 உம் 117/27/13 ஆம் இலக்க கடையிலிருந்து ரூபா 2,000 அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

---------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தொடர்பால் கோபுரங்களின் எண்ணிக்கையினை சபை இனங்கண்டு தொடர்பாடல் வசதிகள் வழங்கப்பட்டுள்ள கம்பனிகளின் பிரகாரம் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 300,000 உம் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,229,339 ஆக இருந்தன.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------------------

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2012 அண்டின் போது ரூபா 80,000 செலவிடப்பட்டு வாடகை வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு கணனி நிகழ்சித்ததிட்டம் ஒன்று பயன்படுத்திருந்த போதிலும் சபையினதும், கணக்காய்வு தேவைப்பாட்டிற்கும் போதியளவு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அந்நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபை கடை தொகுதியின் மூனறாம் மாடியில் 630 சதுர அடி அளவிலான 64 ஆம் இலக்க அறை உடற்பயிற்சி நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக 1999 திசெம்பர் 26 ஆந் திகதி சக்தி சனசமூக மண்டபத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை நிபந்தனை 02

இன் பிரகாரம் மாதாந்த வாடகை திருத்தம் செய்யப்படாமல் இதுவரை ரூபா 3,300 ஆன கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன.

(இ) ஆதனக் கடன் பெற்றுக்கொண்ட ஊழியர்களின் கடன் தவணை உரிய அரச பங்களிப்பினை குறித்த ஊழியரிடமிருந்து கழிப்பதற்கு முன்னர் 2015 மார்ச் 09 ஆந் திகதி 04 ஊழியர்களின் ஆண்டிற்குரிய அரசின் பங்களிப்பு பெறுமதியான ரூபா 408,637 தொகையும் 2015 யூன் 24 ஆந் திகதி ஒரு ஊழியரிடமிருந்து 09 மாதங்களுக்குரிய ரூபா 36,391 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் லக்ஷ்மிபுர வீட்டு முன்மொழிவுத் திட்டம் 2 ஆம் கட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், முதலாம் கட்டத்திற்காக ரூபா 7,617,412 செலவழிந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2011-2012 செயற்படுத்தப்பட்ட இரண்டாம் கட்டத்திற்கிடையே இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் அரசின் கணிப்பிடலின் பிரகாரம் 61 வீடுகளில் 12 வீடுகளில் சபையில் சேவை புரியாத நபர்கள் குடியிருந்தனர். இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் உரிமை பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கஹட்டகஹமுள காணி பிரிக்கும் திட்டத்தின் பிரகாரம் 09 பகுதிகள் பிரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 05, 06, 07, 08 09 ஆகிய 5 துண்டுகள் மாத்திரம் நகர சபை அதிகாரப்பிரதேசத்திற்கு உரித்தாவதால் ஒரு சதவீதம் (1%) குத்தகைக்கு உட்பட திட்டம் அங்கீகரிக்கப்பதற்கு 2015 மே 11 ஆந் திகதி திட்டமிடல் குழு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. நகர சபை கட்டளை அதிகாரச்சட்டத்தின் 165 இ (1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 செப்தம்பர் 10 ஆந் திகதி ரூபா 1,349,000 செலுத்தி பொலித்தீனை பேல் செய்வதற்காக இயந்திரமொன்ற கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், விற்பனை நடவடிக்கைகளை முறையாக திட்டமிடப்படாமையால் பேல் செய்யப்பட்ட பொலித்தீனை விற்பனை செய்து வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

(ஆ) நாளாந்த திண்மக் கழிவுப்பொருள் நிலையத்தில் 09 தொன் அளவில் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுகின்றதுடன், அதில் 07 தொன் சேதனப் பசளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 02 தொன் பொலித்தீன், 2015 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் விற்பனை செய்யப்பட்டு ரூபா 9,590 உழைக்கப்பட்டிருந்த போதிலும், 2015 செப்தம்பர் முதல் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு பேல் செய்யப்பட்ட பொலித்தீன் தனியார் நிறுவனமொன்றுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்ட காரணத்தினால் அவ்வருமானம் இழக்கப்பட்டிருந்தன.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**4.2.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

---

பொது சந்தையின் 02 ஆம் மற்றும் 03 ஆம் இலக்க கடைகள் 2014 யூலை 15 ஆந் திகதி முதல் 2015 யூலை வரை உத்தேச அபிவிருத்தி திட்டம் இல்லாமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்